1978 மார்ச் 13]

ரெயில்வே செஸ் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள்.

* 538 வினா—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடமருதூர் ஒன்றியத்தில் ரெயில்வே செஸ் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் எவை எவை ?

(ஆ) ரெயில்வே செஸ் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் —

(1) பருத்திச்சேரி—ஆரியச்சேரி சாலையின் முடிகொண்டான் ஆற்றில் ஒரு பாலம் கட்டுதல்.

(2) திருவிடமருதூர்—தண்டான்தோட்டம் சாலையில் நாட்டார் ஆற்றில் பாலம் கட்டுதல்.

(3) விட்டலூர் கிராமச்சாலையில் நாட்டார் ஆற்றில் ஒரு பாலம் கட்டுதல்.

(4) திருவிடமருதூர்—தண்டான்தோட்டம் சாலை கீர்த்திருமலைறு ஆற்றில் ஒரு பாலம் கட்டுதல்.

(ஆ) ரெயில்வே செஸ் நிதியிலிருந்து இவ்வொன்றியத்திற்கு ரூ. 3,45,1-40 அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் இரயில்வே செஸ் திட்டத்தின்கீழ் கட்டப்படவிருக்கிற விட்டலூர் பாலம் போக்குவரத்துக் குறைவாக உள்ளதும், பொதுமக்களுக்கு அதிகம் பயன்படாத ஒரு இடத்தில் கட்டப்பட இருக்கின்றது. அதை மாற்றி பொதுமக்களுக்குப் பயன்படும் இடத்திலே அதே விட்டலூர் ஊராட்சியிலே கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத திட்டத்திற்காக எந்த ஆண்டு இந்தக் கோரிக்கை தரப் பட்டது. இது வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா, ஏனென்றால் என்னுடைய தொகுதியில் 20 கிராமங்கள் இருக் கின்றன. அந்தக் கிராமங்களில் எந்த விதமான வேலைகளும் நடைபெறவில்லை. எனவே, இந்தப் பாலம் எந்த ஆண்டிலே கட்டி முடிக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இரயில்வே செஸ் தஞ்சை மாவட்டத்திற்கு 1,28,63,029 ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நடப்பாண்டில் கட்டி முடிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த இரயில்வே செஸ் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தானா அல்லது அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நிதியிலிருந்து செலவிடப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோவை, சேலம், தஞ்சை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங் களில் பழைய காலத்திலே மாவட்டக் குழுவில் இருப்புப் பாதை களைப் பராமரிப்பதற்கு இந்த நிதி இருந்து வருகிறது. ஆகவே மற்ற மாவட்டங்களைப் பற்றி இந்தப் பிரச்சினை இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இரயில்வே செஸ் நிதியின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பணி கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே இந்த நிதியை முன்னுரிமைக் கொடுத்து சிலவற்றிற் குப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கும், தெருவிளக்குகள் போடுவதற்கும், தொடக்கப்பள்ளி கட்டுவதற்கும், குழந்தை கள் மகப்பேறு இல்லங்கள் கட்டுவதற்கும், மருந்தகங்கள். கட்டுவதற்கும், இணைப்புச் சாலைகள் போடுவதற்கும் என்று வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே இப்போது இணைப் புச் சாலை கட்டுவது என்கிற வகையில் இந்த நிதி பயன் படுத்தப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே ஒவ்வொரு ஆண்டும் இந்த ரெயில்வே செஸ் மூலம் எல்லா ஒன்றியங்களுக் கும் நிதி கிடைக்கிறதா ? அப்படியானால், சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு ஏன் வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன் ?

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது கையிலே உள்ள இருப்பைச் செலவு செய்ய வேண்டிய நிலை. ஆகவே இந்த நிதி வளருவதற்கு வழியில்லை.

*539 வினா—திரு. ரா. உமாநாத் : மண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா : சிக்கலில் இருந்து சிக்கப்பத்து, ஒரத்தூர், அகர ஒரத்தூர், கலசம்பாடி, ஆய்மழை, தன்னிலப்பாடி, ஒட்டத்தட்டை வழியாக சோழ வித்தியாபுரம் செல்லும் சாலையை சீர்செய்ய ரயில்வே செஸ் நிதியிலிருந்து ரூபாய் 1·2 இலட்சம் அனுமதிக்கப் பட்டும், வேலைகள் ஆரம்பிக்காமலிருக்கக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த வேலையை எடுத்துக்கொள்ள பொதுமக்களிடமிருந்தும் ஊராட்சி தலைவர்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் வந்தன. ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் குழு ஏற்பட்ட பிறகு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என தீர்மானிக்கப் பட்டது.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்வி கேட்டதே இந்த முக்கியமான பிரச்சினை வரும் என்பதினாலேதான். இது முக்கியமான ரோடு. பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனை வரவில்லை. அதிகாரிகளும் பிளான் போட்டு எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டார்கள். பஞ்சாயத்து, ஒன்றியத் தலைவர்களும் முன்பிருந்த தலைவர்கள்—பெருவாரியான பஞ்சாயத்துத் தலைவர்கள் அதிகாரிகள் போட்ட திட்டத்தின்படி, ஆரம்பிக்க வேண்டும் என்று எழுத்து மூலம் அனுமதித்து விட்டார்கள். ஆனால் அந்த யூனியன் சேர்மன், எக்ஸ் சேர்மன், தன்னுடைய ஊரிலே இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று தனக்கு இருக்கிற 'வீட்டோ' பவர் மூலம், மெஜாரிட்டி பஞ்சாயத்துத் தலைவர்களும் ஓ.கே. கொடுத்துவிட்டபிறகு இது தடைபட்டிருக்கிறது என்ற தகவல் அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சித் தலைவர்களும் ஒத்துக்கொள்ளவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. ஆனால் 66 விழுக்காடு தலைவர்களுடைய ஒப்புதல் பெற்றால், இந்த வேலையை ஆரம்பித்துவிடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தீர்மானம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.